අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/08/26/06/04/17(iii)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2021.04.20

சுற்றிக்கை இலக்கம் - 21/2017(ii)

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப்பணிப்பாளர்கள்
சகல போட்ட பிரதி கல்விப் பணிப்பாளர்கள்/ உதவிக் கல்விப்பணிப்பாளர்கள்,
சகல பிரிவெனாதிபதி தேரர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

**<u>பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் ஏனைய கல்வி நிலையங்களுக்கு இணையதள வசதிகளை பெற்றுக்கொடுத்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வளியிடப்பட்ட 2017.06.21, 2017.10.08 ஆம் தகதிய கல்விச் சுற்றுநிரூபம் 21/2017 மற்றும் 21/2017(i) சுற்றுநிருபங்களுக்கு மேலதிகமானதாகும்

02. அந்த சுற்றுநிரூபத்துடன் வெளியிடப்பட்ட வழிகாட்டல் குறியீட்டின் இலக்கம் 02 இன் விடயங்களுக்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குகின்றேன்.

**<u>திறன் வகுப்பறைகள் மற்றும் நவீன தொழில்நுட்ப கருவிகளின் பாவனைக்கான இணையதள வசதிகள்</u>**

'பாடசாலைகளுக்கு புதிய தொழில்நுட்ப கருவிகளுடன் கூடிய திறன் வகுப்பறைகள் மற்றும் டெப் கணினிகளைப் போன்ற புதிய தொழில்நுட்பங்களுடனான கணினி சார்பான கருவிகள் கிடைப்பதன் அடிப்படையில், பாடசாலைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான இணையதள வழங்குநர் ஒருவர் மூலமாக பய்பர் தொழில்நுட்பத்துடன் கூடிய இணையத்தள பொதியொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ளன.

பேராசிரியர் கே. கபில சீ.கே.பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

# பாடசாலைகளுக்கு இணைய வசதி வழங்கல் தொடர்பான வழிகாட்டல் சஞ்சிகை

**1.0** ஒட்டுமொத்த கல்வி முறைமையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப பயன்பாட்டைப் பொருத்துவதை இலக்காகக் கொண்டு பாடசாலைகளுக்கு இணையத் தொடர்பை வழங்கப்படுகிறது. அதன் மூலம் கீழ் வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறுங்கால நோக்கம்**

- இணையத்தில் நிலவும் வளங்களுக்குள் நுழைதல்
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உள்நோக்கம் வழங்கல்
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தரத்தை அபிவிருத்தி செய்தல்.
- இற்றைப்படுத்தப்பட்ட அறிவில் நுழையும் வாய்ப்பை ஏற்படுத்தல்.
- புத்தாங்கங்களை உருவாக்க மாணவரை ஊக்குவித்தல்.
- ஆசிரியர் மாணவர் தொடர்பாடலுக்கு ஊடகமொன்றை வழங்கல்.
- பாடசாலையில் கற்றல் முறைமைகளை அதிகமாகப் பயன்படுத்த வாய்ப்பளித்தல்.
- கல்வி முகாமைத்துவத்துக்கு உரிய செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.
-

**நடுத்தரகால நோக்கம்**

- பாடசாலைகளில் புதிய ஆங்கங்களை உருவாக்கல்.
- புதிய அறிவால் இற்றைப்படுத்தப்பட்ட ஆசிரிய சமூகத்தை உருவாக்கல்.
- சுய கற்றல் மூலம் அறிவைத் தேடிச் செல்பவராகச் செய்தல்.
- விமர்சன கற்றல் வாய்ப்புக்கு மாணவரை தொர்புபடுத்தல்.
- மாணவரிடையே அறிவுப் பரிமாற்றம்.
- முறையான மதிப்பீட்டு செயல்முறையைக் கட்டியெழுப்புதல்.
- குறித்த செயற்பாடுகளால் கல்வி முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

**நெடுங்கால நோக்கம்.**

- எதிர்கால தொழில் உலகுக்கு இசைவான மாணவ சந்ததியை உருவாக்கல்.
- தொழினுட்பத் தகைமை கொண்ட குடிமக்களை உருவாக்கல்.
- கணினி அறிவை மேம்படுத்தல்.
- எண்சார் பகிர்வை (Digital divide) குறைத்தல்.
- ஆண் பெண் சமத்துவம் (Gender Equity).
- பண்பு நிறைந்த ஆற்றல்மிக்க சமூக வலைப்பின்னலை உருவாக்குதல்.
- கல்வி முகாமைத்துவ தகவல் முறைகளில் இணைக்கப்பட்ட பாடசாலை முறைமையை நிறுவுதல்.

## 1.1 பாடசாலை இணையத்தைப் பயன்படுத்தற் கொள்கை (School Internet Usage Policy)

பாடசாலைகளில் இணையத்தைப் பயன்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும்.

- பொருத்தமற்ற இணையத்தைப் பொருத்துவதை தவிர்ப்பதற்காக Web-filtering Software மூலம் தடுக்கப்பட்டு பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியேற்படும். அந்த பாதுகாப்பு முறையை மீறி செயற்படக் கூடாது.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இருபகுதியினருக்கும் இணையத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக பயிற்சியளித்தல் மற்றும் விளக்கமளித்தல் கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலை மூலமாக வழங்கப்படும்.
- கற்றல் செயற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பெற்ற, அனுமதிக்கப்படாத மென்பொருளை பதிவேற்றம் (Upload) மற்றும் பதிவிறக்கம் (Download) செய்வதற்கு அனுமதி இல்லை.
- வைரஸ்தடுப்பு மென்பொருள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்ப படல் வேண்டும்.
- ஆசிரியர்களின் அனுமதியின்றி எந்தவொரு சேமிப்பு ஊடகத்தையும் (CD, DVD, Pen Drive, etc) பயன்படுத்தக் கூடாது.
- பாடசாலைக்கு அல்லது பாடசாலை மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இழுக்கு ஏற்படாதா வண்ணம் இணையத்தைப் பயனபடுத்த வேண்டும்.
- சட்ட முரணான, பொருத்தமற்ற வெப் தளங்களுக்குள் கற்பனை பண்ணி நுழையக் கூடாது.
- திடிரென்று, தெரியாத்தனமாக அல்லது தவறாக ஒரு மாணவர் அவ்வாறான பொருத்தமற்ற வெப் தளத்தில் நுழைந்தால் அது தெமதாடர்பாக உடனடியாக நிர்வாக ஆசிரியரியருக்கு (Administrator) அறிவிக்க வேண்டும்.
- மாணவர்கள் கல்வித் தேவைக்காக மாத்திரமே இணைய வசதிதை பயன்படுத்த வேண்டும்.
- இணையத்தின் ஊடாக (வெப் தளத்தில் அல்லது வேறு ஊடகங்களில்) யாதேனும் தகவலை பதிவிறக்கம் செய்து வேறு தேவைக்காக பயன்படுத்த வேண்டுமானால் அதன் வெளியீட்டு உரிமை குறிப்பிடப்படல் வேண்டும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட தகவல்களை இணையத்தில் பதிவிடுதலை அல்லது வெளியிடுதலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- பாடசாலையின் தகவல் தொழினுட்ப கொள்கையை மீறி எந்தவொரு வெளியீட்டை செய்யக் கூடாது.
- இணையத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சகல செயல்களும் ஆசிரியர்களின் கண்காணிப்புக்கும் கட்டுப்படுத்தலுக்கும் உட்பட்டது என்பதை மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

## 1.2 மின்னஞ்சல் (E-Mail)

- ஆசிரியரின் அனுமதி மற்றும் கட்டுப்பாட்டின் பேரில் பாடசாலையில் மின்னஞ்சலைப் பயன்படுத்த வேண்டும்.
- சட்ட விரோத அல்லது பொருத்தமற்ற அல்லது வேறு யாருக்கும் தொந்தரவு ஏற்படுத்தும் எந்தவொரு தகவலையும் மின்னஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்தல் ஆகாது.
- தனது அல்லது வேறு எவரதும் தனிப்பட்ட தகவல்களை (முகவரி, தொலைபேசி இலக்கம், நிழற்படம்) மின்னஞ்சல் ஊடாக பரிமாற்றம் செயல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலமாக அல்லது இணையம் மூலமாக அறியப்பட்ட எந்தவொரு தனிநபருடனும் நேருக்கு நேர் விவாதம் செய்தல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலம் இணைப்புகளை அனுப்பும்போது ஆசிரியரின் அனுமதியுடன் அனுப்ப வேண்டும்.

## 1.3 இணையத்தில் அளவளாவுதல் (Internet Chat)

- இணையத்தில் அளவளாவுவதற்கு பாடசாலையில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- கல்வி விடயங்களுக்கு மாத்திரம் இணையத்தில் அளவளாவுதலை மேற்கொள்ள முடியும், அதுவும் ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இடம் பெற வேண்டும்.

## 1.4 வெப் தளம் )Web Site)

- அனுமதிக்கப்பட்ட பாடப் உள்ளடகத்தை மாத்திரமே பாடசாலையின் வெப் தளத்தில் வெளியிடுவதற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- வெப் தளத்தில் மாணவரின் தகவல், நிழற்படம் மற்றும் ஆக்கத்தை வெளியிடுவதானால், அதற்கு பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கோண்ண வேண்டும்.
- அனுமதியுடன் பாடசாலை வெப் தளத்தில் மாணவரின் ஆக்கத்தை வெளியிட்டால், அதன் உரிமை மாணவருக்கே உரியது.

## 1.5 தனிப்பட்ட கருவி - Personal Device

- இணைய பயன்படுத்தல் கொள்கைக்கு அமைய மாணவர் தமது தனிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி நிழற்படம் அல்லது வீடியோ எடுத்தல், அனுப்புதல், இணையத்தில் நுழைதல் முதலான செயல்களை பாடசாலையில் மேற்கொள்ள முடியாது.

**மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில்,**

- ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் (எழுத்து மூலமான எச்சரிக்கை, குறுகியகால இணைய நுழைவுத் தடைசெய்தல் முதலியன).
- இவ்வாறான தவறான செயல்களை தொடர்ந்து செய்தால் மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்படும்.

இந்த அறிவுறுத்தல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பில் மாணவர் அறிவுறுத்தல் கையேட்டானது இந்த வசதியைப் பயன்படுத்தும் மாணவர்களுக்குக் கொடுத்து, அது தொடர்பில் விளக்கப்படுத்தி, அந்த அறிவுறுத்தல் கையேட்டைப் பின்பற்றுகைக் கூறும் மாணவர் மற்றும் பெற்றோரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலையில் இணையத்தைப் பயன்படுத்தும் கொள்கைத் திட்டத்தை சகல மாணவர்களுக்கு எப்போதும் அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும். அது சம்பந்தமான அறிவுறுத்தல் கையேட்டை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் நன்றாக்க் காணக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

## 2.0 பாடசாலைக்குப் பொருத்தமான இணைய தொகுப்பை பெற்றுக்கொள்ளல்.

கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இணையத் தொகுப்புகளில் (பெக்கேஜ்) பொருத்தமான தொகுப்பை அதில் குறித்த விலையில் இணைய சேவை வழங்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாடசாலைக்கு பொருத்தமான இணையத் தொகுப்பு பெக்கேஜை தெரிவு செய்யும் போது கீழ்க் காணப்படும் தேர்வளவை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- இணையத்தை பொருத்துவதற்கு ஒரு தடவையில் இணைக்கக் கூடிய கணினிகளின் அதியுச்ச எண்ணிக்கை (பாடசாலையில்)

- பாடசாலையால் இணையத் தொகுப்பு ஊடாக பெற்றுக்கொள்ள விரும்பும் சேவைகள்.
- ஒரு மாதத்தில் பாடசாலையால் இதற்காக வழங்கக் கூடிய அதியுச்ச நிதி.
- தற்போதும் இணைய தொகுப்பு உள்ளதாயின் அந்த தொகுப்பை கொண்டு நடத்துவது அல்லது இந்த புதிய இணையத் தொகுப்புக்கு மாறுவதை தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளும் ஆற்றல்.
- பாடசாலையின் தேவைக்கேற்ப எத்தனை இணையத் தொகுப்பையும் பயன்படுத்தும் ஆற்றல்.
- பாடசாலை அமைந்திருக்கும் பிரதேசத்தில் மிகவும் நல்ல கவரேஜ் (Coverage) செய்யும் இணைய வழங்குநரை அடையாளம் காணல்.
- தறபோது குறித்த பிரதேசத்தில் கவரேஜ் ஆகும் மிக நல்ல செயற்றிறனுள்ள தொழினுட்பத்தை அமையாளம் காணல் ( உதா - 4G Broadband, ADSL, WiMax, ...).
- பாடசாலையால் தீர்மானிக்கப்படும் இணையத் தொகுப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவாறு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு குறித்த நிறுவனங்களின் தொடர்பு அலுவலர்களின் தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி இணைப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

இணைப்பு 2 இல் பெக்கேஜை தெரிவு செய்தல் சம்பந்தமாக விசேட விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தால் அந்த விடயங்களை கவனத்தில் எடுத்துப் கொள்ள வேண்டும்.

மேலே தேர்வளவின் கீழ் பாடசாலை தேவைக்கு மிகவும் பொருத்தமான இணையத் தொகுப்பு மற்றும் சேவை வழங்குநரை பாடசாலை கொள்வனவுக் குழு மூலம் தெரிவு செய்ய வேண்டும். இதற்குத் தேவையான தொழினுட்ப உதவியை வலய வன்பொருள் மற்றும் வலைப்பின்னல் தீர்வுக் குழு மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

- பாடசாலையில் கணினி பயன்படுத்தும் விசாலமான ஒரு இடத்தினை இணையத் தொகுப்பு நிறுவுவதற்கு தெரிவு செய்ய வேண்டும்.
- Router (திசைவி), Serial number, தொகுப்பு வழங்கப்பட்ட திகதி மற்றும் Circuit ID போன்ற தகவல் உட்பட சம்பவத்திரட்டு ஏட்டில் (லொக்புக்) குறிக்கப்படல் வேண்டும்.
- Router (திசைவி) பொருட் பதிவேட்டில் பதியப்படக்கூடாது. அத்துடன் இந்த தகவல் உள்ளடங்கிய கோப்பு ஒன்றை இணைய தொகுப்பு தொடர்பில் பேணிவரல் வேண்டும்.

<u>**திறன் வகுப்பறைகள் மற்றும் நவீன தொழில்நுட்ப கருவிகளின் பாவனைக்கான இணையதள வசதிகள்**</u>

பாடசாலைகளுக்கு புதிய தொழில்நுட்ப கருவிகளுடன் கூடிய திறன் வகுப்பறைகள் மற்றும் டெப் கணினிகளைப் போன்ற புதிய தொழில்நுட்பங்களுடனான கணினி சார்பான கருவிகள் கிடைப்பதன் அடிப்படையில், பாடசாலைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான இணையதள வழங்குநர் ஒருவர் மூலமாக பய்பர் தொழில்நுட்பத்துடன் கூடிய இணையத்தள பொதியொன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ளன.

## 2.1 <u>இந்த இணைய சேவையுடன் வழங்கப்படும் ஏனைய சேவைகள்.</u>

- Web filtering சேவை.

## 2.2 <u>இணைய தொகுப்புக்கு அறவிடப்படும் கட்டணம் மற்றும் செலுத்து முறை.</u>

1. ஆரம்ப நிறுவுதல் கட்டணம் (Router கருவிக்குரிய சேவைக கட்டணத்திடன்).
   - இந்த இணைத் தொகுப்பு பக்கேஜ் யாவும் ஆரம்ப நிறுவுதல் கட்டணம் இல்லாமல் வழங்கப்படும்.
   - இந்த இணைய தொகுப்புக்கு உரிய ஆரம்ப நிறுவுதல் செய்த பின்னர், அந்த தொகுப்பு உரிய முறையில் செயல்படுகிறது என்ற அறிக்கையை அதிபர் க்கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கிளைக்கு நகலுடன், வலய தகவல் தொழினுட்ப இணைப்பு அலுவலருக்கு வழங்க வேண்டும். (அது சம்பந்தமாக இணைப்பு 4 ஐப் பயன்படுத்தவும்).
   - ஆரம்ப நிறுவுதலுக்கு ஏற்றவாறு பொருத்தப்பட்ட Router கருவி குறித்த இணைய சேவை வழங்குநருக்கு சொந்தமானதாகும்.

2. மாதாந்த பில் கட்டணம்
   - மாதாந்த கட்டணம் குறிக்கப்பட்ட பில் குறித்த சேவை வழங்குநரால் பாடசாலைக்கு வழங்கப்படும்.
   - இந்த மாதாந்த கட்டணம் அடங்கிய பில்லுக்கு உரிய கட்டணத்தை பாடசாலை குறித்த சேவை வழங்குநருக்குச் செலுத்த வேண்டும்.

   இந்த மாதாந்த கட்டணத்தை செலுத்துதல் தொடர்பு குறித்ததான செலவு 2013/07 இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு அமைய பாடசாலை தயாரிக்கும் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தில் உள்ளிட்டு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. மேலதிய தரவு பயன்டுத்தல்

- மேலதிக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முகாமைத்துவ குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அந்த மேலதிய செலவை பாடசாலையே பொறுப்பேற்க வேண்டும்.
- இது தொடர்பிலான கட்டணம், பெற்றுக் கொண்ட பெக்கேஜுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள இணைப்பு 02 இல் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

## 2.3 பெற்றுக் கொண்ட இணைய சேவை வழங்கலை பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள்.

இந்த இணையத் தொடர்பை பாடசாலை வேளையின் பின்னரும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் வெளிப் பயனாளிகளுக்கு சேவை வழங்குவதற்கு பயன்படுத்த முடியும். வெளியாருக்கு வழங்குவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய அறவீடு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2005/29 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமையவும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் அனுமதியுடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 2.4 பாடசாலை இணையத்தை உகந்த முறையில் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி.

பாடசாலை முறைமையில் இணையத்தைப் பயன்படுத்தி மிகவும் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடு இடம்பெறச் செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் தொடர்பில் வலைப்பின்னல் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட்ட பயிற்சி வழங்க வேண்டும்.

- கணினி வலைப்பின்னல் கட்டமைப்பு 4 மேற்கொள்ளல் மற்றும் முகாமைத்துவம் (Network Configuration and Management)
- Server Configuration

## 2.5 இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை

1. இணையத்தை பயனுறு முறையில் பயன்படுத்தல் சம்பந்தமாக பாடசாலையில் உள்ளக ஒழுங்குமுறை மேற்கொள்ளப்பட வேண்டும்.
   நாளாந்த இணைய பயன்பாடு பற்றிய அறிக்கையேடு, கணினி ஆய்வு கூட அறிக்கையேடு, வகுப்பு அறிக்கையேடு, .... முதலியன கணினி ஆய்வு கூடத்தில் இணையப் பயன்படுத்தல் ஒழுங்குமுறைக்கு பயன்படுத்தக் கூடியவை.
   (அது தொடர்பில் பொருத்தமான மென்பொருளையும் பயன்படுத்தலாம்).

2. மாதாந்த பயன்பாடு தொடர்பான (Usage) பரிசீலனையொன்றை பாடசாலைக்கு மேலதிகமாக வலயக் கல்வி அலுவலகம், மாகாண கல்வித் திணைக்களம் அல்லது கல்வி அமைச்சு மூலமாக மேற்கொள்வதற்கு ஒரு செயன்முறையையும் குறித்த சேவை வழங்குரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 2.6 இணையத் தொகுப்பைக் கைவிடல் அல்லது பயன்யபடுத்தும் பெக்கேஜை மாற்றுதல்.

பாடசாலை மூலம் பெற்றுக் கொண்ட இணையத் தொகுப்பின் மூலம் பயனுள்ள பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டால் சேவை வழங்குநருக்கு அறிவித்த பின்னர் தொகுப்பைக் கைவிடுவதற்கு அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு காரணத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கிளைக்கு அறிவிக்க வேண்டும்.

தற்போது பயன்படுத்தப்படும் தொழினுட்பம் பாடசாலையின் தற்போதைய தேவை மற்றும் இணைய சேவை வழங்குநர்களின் தற்போதைய இணைய சேவை வசதி வழங்கும் ஆற்றல் என்பவற்றைப் பரிசீலனை செய்த பின்னரே இணைப்பு 02 மூலம் வழங்கப்பட்ட இணைய பெக்கேஜ்களுக்கு உரிய விபரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உருவாகும் தொழினுட்ட மாற்றங்கள் மற்றும் பாடசாலைத் தேவைப்பாடுக்கு அமைய இந்த விபரக் குறிப்புகளுக்கு மாறான வேறு இணையத் தொகுப்பு அறிமுகப்படுத்தல் இடம் பெற்றால் அதற்கு மாறிக் கொள்ளும் உரிமை பாடசாலை அதிகாரிகளுக்கு உண்டு.

பாடசாலை மூலம் பெற்றுக் கொண்ட பெக்கேஜ் பாடசாலைத் தேவைப்பாட்டுக்கு பொருத்தமானது அல்ல என்று தெரிந்தால் பாடசாலை முகாமைத்துவ குழுவின் பரிந்துரைக்கு அமைய வேறு பெக்கேஜுக்கு மாறிக்கொள்ளலாம். இந்த மாற்றத்தை நிதி அடிப்படையில் நட்டமானதாக இருக்காதவாறு மேற்கொள்ள முடியும். பெக்கேஜை மாற்றுவதாயின் அந்த மாற்றத்தை மேற்கொண்ட பின்னர் கல்வி அமைச்சு மற்றும் மாகாண, வலய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். இதன் போது பணக் கொடுப்பனவு தேவையாயின் அதைப் பாடசாலையே பொறுப்பேற்க வேண்டும்.

## 3.0 பாடசாலை உள்ளக கணினி வலையமைப்பு

பாடசாலையால் பெற்றுக் கொள்ளப்பட்ட இணையத் தொடர்பைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளக வலையமைப்பு (Network) முறைமையை தயாரித்துக் கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழ் வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

- வலையமைப்புடனோ அல்லது வலையமைப் இல்லாமலோ தயாரித்தல்.
- தேவைக்கு ஏற்ப வலையமைப்பை பெருப்பிப்பதற்கு switches மற்றும் access point ஐப் பயன்படுத்தல்.
- புதிய வலையமைப்பை அமைக்கும் போது மாற்றுவதாயில் வேகம் 10/100/1000 Mbps-switches மற்றும் Cat 6 கொண்டு மேல்வரும் தொழினுட்ப தேவைக்கு பொருத்தமான உதிரிப் பாகஙடகளைப் பயன்படுத்துவது சிறந்தது.
- பொருத்தமான வலையமைப்பு கலைநுட்பத்தைப் (Architecture) பயன்படுத்தல். (உதா - Workgroup, Client-Server).
- இணைப் பாதுகாப்பு முறைகளுக்கு பொருத்தமான மென்பொருள் மற்றும் தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.

## 4.0 2016/01 சுற்றறிக்கை 3 (அ) க்கு அமைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு சுமத்தப்படுகின்றது.

- கணினி வலையமைப்பு பயன்படுத்தலை கண்காணித்தல்.
- இணைய தொகுப்பு குறைகளை அறிக்கை செய்தல்.
- ஜோ்னல் ஒன்றை பேணி வரல்.
- தேவையான தகவலை அதிபர் ஊடாக வலய / மாகாண / கல்வி அமைச்சுக்கு அனுப்புதல்.
- இணையத்தை முறைகேடாகப் பயன்படுத்தலைத் தவிர்ப்பதற்கு உரிய செயன்முறையைப் பின்பற்றல்.
- பாடசாலையின் தேவைப்பாடுக்கு ஏற்ப வலையமைப்பை நவீனப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரையை பாடசாலை கணினி ஆய்வு கூட முகாமைத்துவக் குழுவிடம் பெற்றுக்கொள்ளல்.
- பாகதுகாப்பாக இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழங்கல், வழி காட்டல், பாடசாலை அறிவுறுத்தல் வழிகாட்டல் சஞ்சிகையை வெளியிடல்.
- தொடர்ந்தும் பயன்படுத்தக் கூடிய மென்பொருளைப் பதிவிறக்கம் (download) செய்து சேர்வர் (Server) ஒன்றை நிறுவுதல்.